# ஒப்பியல் நோக்கில் தொல்காப்பியம் - கேரள பாணினீயத்தில் புணர்ச்சிக் கோட்பாடுகள்

**முனைவர் து.ராஜம்மாள்**
உதவி பேராசிரியர்
தமிழ்த்துறை
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

மொழியின் இயல்பை விளக்குவது இலக்கணம். மக்கள் பேச்சு மொழியினை ஒழுங்குபடுத்தச் சான்றோர்களால் எழுதப்பட்டது இலக்கணமாகும். அதை மொழி இலக்கணம், கவிதை இலக்கணம் எனப் பகுப்பர். மொழி இலக்கணமென்பது எழுத்து, சொல், தொடர் தொடர்பானது. மொழி மனிதமூளையின் நுண்ணறிவுத்திறனின் வெளிப்பாடு, மனிதனைச் சமூகமாக வாழ வழிவகுப்பது. மொழியில் பொதிந்துள்ள பொதுமையையும் வேறுபாட்டையும் காண்பதே இலக்கணஆய்வு. மொழிச் சமூகத்தின் அறிவுத்தேடலைத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறது. இலக்கணஆய்வு சொற்களின் வடிவம், பயன்வகை (Function) மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றம் போன்றவற்றைக் குறிக்கின்றது. அவ்வகையில் தமிழ், மலையாள மொழி இலக்கணங்களில் உள்ள புணர்ச்சிக் கோட்பாட்டினை ஒப்பிட்டு நோக்கி ஆராய்வதாக கட்டுரை அமைந்துள்ளது.

**புணர்ச்சி**

புணர்ச்சி என்பது இரு சொற்கள் புணர்தலைக் குறிக்கும். அவை தனித்து இயங்கும் கட்டிலா வடிவம் (Freeform) ஆக இருக்கவேண்டும். அவ்விரண்டு சொற்களில் புணர்தலுக்குரியவாக அமைவது நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் ஆகும். வீரமாமுனிவர் புணர்ச்சிக்கு 'இசைப்பு' 'கலத்தல்' என்ற பொருளினைச் சதுரகராதியில் தருகின்றார். 'புணர்' என்பது 'புதுமை' என்றும், 'புணர்வு' என்பதை 'இசைப்பு' என்றும் 'கலத்தல்' என்பது எழுத்திலாவோசையே புணர்ச்சி என்று தமிழில் பேரகராதி பொருள் கூறுகின்றது. எழுத்துக்களின் பிறப்பும், மயக்கமும் புணர்ச்சி விகாரங்களுக்குக் காரணமாக அமைகின்றது.

**புணர்ச்சியும் சந்தியும்**

தமிழிலக்கணக்காரர்கள் இரண்டு சொற்களிலுள்ள எழுத்துக்கள் புணர்தலைப் புணர்ச்சி எனக் கொண்டனர். ஆனால் மொழியியலார் அதனை சந்தி என்றும் உருபொலியனியல் (Morphopohonetic) என்றும் குறிப்பிடுவர். இலக்கணநூலார் கூறும் புணர்ச்சியும் மொழியியலார் கூறும் சந்தியும் நுண்ணிய வேறுபாட்டினை உடையது. ஆனால் 'சந்தி, புணர்ச்சி ஆகிய இரு சொற்களும் வேறுபாடு இல்லாது ஒரே பொருளில் கையாளப்படுவதுண்டு என்று எஸ்.சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

புணர்ச்சிக்கும் சந்திக்கும் உள்ள வேறுபாட்டினை செ.வை.சண்முகம் இலக்கண நூல்களின் சொற்சேர்க்கையால் புணர்ச்சி மாற்றம் ஏற்படுகின்றது

என்று கொள்கின்றார், மொழியில் தனிச்சொல்லின் எழுத்து மாற்றமே உருபொலி அல்லது சந்தி என்று கொள்கிறார். மொழியியலார். தனிச்சொல்லின் மாற்று வடிவங்களை ஒலியினால் கட்டுண்ட மாற்றம் (Phonologically conditioned alternet), உருபனால் கட்டுண்ட மாற்றம் (Morphologically conditioned alternet) என்று பிரிப்பர். தமிழிலக்கணப் புணர்ச்சிக் கோட்பாடுகள் இவ்விரண்டு முறையிலும் அமைந்துள்ளது. எனவே இலக்கண நூலார் சொல்லும் புணர்ச்சி, மொழியியலார் கூறும் சந்தி என்பது தனிச்சொற்களே தவிர மாற்றுப்பொருளை உணர்த்துவன அல்ல.

தென் திராவிட மொழிகளுள் மலையாள மொழியும் ஒன்று. இம்மொழி தமிழ் மொழியிலிருந்து பிறந்தது என மொழியியல் அறிஞர் கருதுவர். மலையாள மொழி பேசும் கேரள நாடு சேரநாட்டின் ஒருபகுதியென தமிழ் இலக்கியப் பதிவுகளில் அறிந்து கொள்ள முடிகின்றது. பௌத்த, சமண சமய எழுச்சிக் காலங்களில் மலையாளம் கொடுந்தமிழாகிப் பிரிந்தது எனக் கருதுகின்றனர். ஆனால் மலையாள மொழி சமஸ்கிருதத்தின் தாக்கம் பெற்று இருந்தாலும், தமிழ்மொழியின் அமைப்பினையும், நடையினையும் பெற்று தமிழ்மொழியோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது. எழுத்தச்சன் மலையாள எழுத்து 51 என்கிறார். இவ்வெழுத்துக்களின் சேர்க்கையே சொல்லாக உருமாற்றம் பெற்றது. ஆரிய திராவிடப் பண்பாட்டுக் கலப்பால் புதிய மலையாளம் எழுத்தச்சனால் உருவாக்கப்பட்டது. ஆரிய எழுத்தினை ஏற்றுக் கொள்ளுதல், சமஸ்கிருதயாப்பு விதியைத் தமிழ் விருத்தங்களுடன் கலத்தல் போன்ற மொழிச் சீர்த்திருத்தங்களாக உருமாறின. மலையாளத்தில் இலக்கண நூல்களின் நிலைத்தத்தன்மை பிற்காலத்தில் ஏற்பட்டது.

மலையாளமொழி இலக்கண அமைப்பானது தமிழ்மொழியை ஒத்திருந்தாலும் சமஸ்கிருதமொழியின் தன்மையைப் பெற்றுள்ளது. சமஸ்கிருதத்தில் வேதங்களின் பாராயணத்திற்கே பாணினீ மொழிபிறப்பு, ஒலிப்புப் புணர்ச்சி இலக்கணத்தை முதன்முதலில் உருவாக்கியுள்ளார். இவ்வகையிலேயான அமைப்புமுறை கொண்ட மலையாள இலக்கணம் புணர்ச்சிக் கோட்பாடு தமிழ்மொழி இலக்கணத்துடன் ஆராயப்படுகின்றது.

**புணர்ச்சியின் இயல்பு**

எழுத்துக்களால் உருவான இருசொற்கள் ஒன்றாகப் பொருந்தி நிற்பது புணர்ச்சி ஆகும். தொல்காப்பியர் நிலைமொழியின் ஈற்றெழுத்தோடு வருமொழியின் முதலெழுத்து புணர்வது புணர்ச்சி என்கிறார். அப்புணர்ச்சி நான்கு நிலைகளில் நிகழ்கின்றன. அவை,

**“உயிர் இறு சொல்முன் உயிர்வருவழியும்**
**உயிர் இறு சொல்முன் மெய்வருவழியும்**
**மெய் இறு சொல்முன் மெய்வருவழியும்**
**மெய் இறு சொல்முன் உயிர்வருவழியும்**
**இவ்வென அறியக் கிளக்கும் காலை**
**நிறுத்த சொல்லே குறித்து வருகிளவி என்று**
**ஆஈர் இயல் புணர்நிலைச் சுட்டே” (தொல்.107)**

என்ற நூற்பாவில் புணர்ச்சிக்கான எழுத்துநிலையை விளக்குகின்றார். நிலைமொழியின் ஈறு உயிராக இருந்து வருமொழியின் முதல் உயிராக வருதல். இதனை மலையாள இலக்கணத்தில் உயிர் புணர்ச்சி என்கின்றனர்.

**மணி + அடித்தான் = மணியடித்தான் (தமிழ்)**
**மழ + அல்ல = மழயல்ல (மலையாளம்)**

நிலைமொழியின் ஈறு உயிராக இருந்து வருமொழியின் முதல் மெய்யாக வருதல். இதனை கேரளப்பாணினீயம் உயிர்மெய் புணர்ச்சி என்கின்றது.

**அணி + தந்தான் = அணிதந்தான் (தமிழ்)**
**தாமர + குளம் = தாமரக்குளம் (மலையாளம்)**

நிலைமொழியின் ஈறு மெய்யாக இருந்து வருமொழியின் முதல் மெய்யாக வருதல். இதனை கேரளப்பாணினீயம் மெய் புணர்ச்சி என்கின்றது.

**மரம் + வீழ்ந்தது = மரம் வீழ்ந்தது (தமிழ்)**
**நெல் + மணி = நென்மணி (மலையாளம்)**

நிலைமொழியின் ஈறு மெய்யான இருந்து வருமொழியின் முதல் உயிராக வருதல். இதனை கேரளப்பாணினீயம் உயிர் மெய் புணர்ச்சி என்கின்றது.

**கண் + அழகு = கண்ணழகு (தமிழ்)**
**கண்(ண்) + இல்லை = கண்ணில்லை (மலையாளம்)**

புணர்ச்சியில் இடம்பெறும் சொற்கள் இருமொழியிலும் பெயர்ச்சொற்களாகவும், வினைச்சொற்களாகவும் அமைந்துள்ளன.

மலையாள மொழி இலக்கணம் இருசொற்களின் சேர்க்கை அடிப்படையில் புணர்ச்சி நிலைகளை நான்காக வகைப்படுத்துகிறது. அவை

**பொதுப்புணர்ச்சி**

பத இடைப்புணர்ச்சி
பத இறுதிப்புணர்ச்சி
இருநிலைப்புணர்ச்சி என்பனவாகும்.

**பொன் + பூ = பொல்பூ**
**மணி + அறம் + இல் = மணியறயில்**

**மொழியியலில் புணர்ச்சி**

மொழியியலார் புணர்ச்சியினை இருவகையாக வகைப்பாடு செய்வர்.

**அகப்புணர்ச்சி (Internal Sandhi)**
**புறப்புணர்ச்சி (External Sandhi)**

**அகப்புணர்ச்சி**

இரண்டு உருபன்கள் அல்லது சொற்கள் அல்லது ஒரு சொல், உருபன் போன்றவை ஒன்றோடொன்று சேரும் போது ஏற்படும் மாற்றமே அகப்புணர்ச்சி எனப்படும்.

**மரம் + வேர் = மரவேர்**
**நீ + செவி = நின்செவி**

இச்சான்றுகளும் ஒரு கட்டு உருபுடன் தனியுருபு சேர்ந்து வரும்போது ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுவதால் இதனை அகப்புணர்ச்சி என்கிறோம்.

**புறப்புணர்ச்சி**

ஓர் இலக்கண அமைப்பில் ஒரு சொல் தொடருடன் மற்றொரு சொல், தொடர் அல்லது உருபன் இணையும் போது உருபொலியனியல் ஏற்படும் மாற்றமே புறப்புணர்ச்சி எனப்படும்.

**அகம் + புறம் = அகப்புறம்**
**மண் + குடம் = மட்குடம்**

தனி உருபுகளாகவே புணர்ந்து நிற்கும் புணர்ச்சியை முத்துச் சண்முகம் புறப்புணர்ச்சி என்கிறார். புணர்ச்சியான அதன் நிலைக்கேற்ப மொழியியலார்,

**தன்னியல்புப் புணர்ச்சி**
**தன்னியல்பில்லாப் புணர்ச்சி**

என இரண்டாகப் பாகுபாடு செய்வர்.

எவ்வித விதிவிலக்குமின்றி இயல்பாகச் சொற்கள் புணர்வது தன்னியல்புப் புணர்ச்சி எனப்படும்.

**அகல் + விளக்கு = அகல் விளக்கு**

இயல்புப் புணர்ச்சி விதிகளுக்குப் புறம்பாகப் புணர்வது தன்னியல்பில்லாப் புணர்ச்சி எனப்படும்.

**மா + இருஞாலம் = மாயிருஞாலம் (உடம்படு மெய் தோன்றல்)**

புணர்ச்சியினை அதன் தன்மைக்கேற்ப மொழியியலார்

**ஒழுங்குடைப் புணர்ச்சி (Regular Sandhi)**
**ஒழுங்கில்லாப் புணர்ச்சி (Irregular Sandhi)**

எனவும் பாகுபாடு செய்துள்ளனர்.

ஒரு குறிப்பிட்டவகைப் புணர்ச்சி பெரும்பான்மையான இடங்களுக்குப் பொருந்தி வருமாயின் அது ஒழுங்குடைப்புணர்ச்சி எனப்படும்.

**மரம் + கிளை = மரக்கிளை**

ஒரு குறிப்பிட்டவகைப் புணர்ச்சி பெரும்பான்மையான இடங்களுக்குப் பொருந்தி வாராதிருக்குமாயின் அது ஒழுங்கிலாப்புணர்ச்சி எனப்படும்.

**சோழன் + நாடு = சோணாடு**

புணர்ச்சி நடைபெறும் சூழலுக்கேற்ப அதனை இருவகையாகப் பகுப்பர்.

**ஒலியினால் கட்டுண்ட புணர்ச்சி**
**உருபனால் கட்டுண்ட புணர்ச்சி**

ஒலியினைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி ஒலியினால் கட்டுண்ட புணர்ச்சி எனப்படும்.

**மரம் + கிளை = மரக்கிளை**

உருபனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சி எனப்படும்.

**நாழி + உரி = நாடுரி**

மொழியியல் அறிஞர்கள் புணர்ச்சிக் கோட்பாட்டினை பல்வேறான அணுகுமுறையில் அணுகினாலும், எழுத்துக்களின் ஒலிப்பு முறை, உருபுகளின் பிணைப்பைக் கொண்டே புணர்ச்சிக் கோட்பாட்டைக் கட்டமைத்துள்ளனர்.

### புணர்ச்சியின் வகைகள்

புணர்ச்சியினை இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என இரண்டாகப் பகுக்கலாம்.

**“மூன்றே திரிபு இடன் ஒன்றே இயல்பு என” (தொல்.108)**

### இயல்புப்புணர்ச்சி

புணர்ச்சியில் நிலை, வருமொழியில் வரக்கூடிய பெயர், வினைச்சொற்களின் இறுதி முதல் ஒலிமாற்றமெதுவுமின்றி இயல்பாக நிகழும் புணர்ச்சி இயல்புப் புணர்ச்சியாகும்.

**பொன் + மலை = பொன்மலை**
**ஒளி + மணி = ஒளிமணி**

### விகாரப்புணர்ச்சி

புணர்ச்சியில் இடம்பெறும் இருமொழிபெயர், வினைச் சொற்களில் அமைந்து, அதன் இறுதி ஒலிமாற்றம் நிகழுமானால் அவை விகாரப்புணர்ச்சி எனப்படும். விகாரப்புணர்ச்சி மூன்று வகைப்படும்.

**“அவை தாம் மெய்பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று**
**இவ் என மொழிப திரியுமாறே” (தொல்.109)**

1. தோன்றல்
2. குன்றல்
3. திரிதல் (மெய்ப்பிறிதாதல்) என விகாரப்புணர்ச்சியினைத் தொல்காப்பியம் வகைப்படுத்துகின்றது.

கேரள பாணினீயத்தில் இம்மூன்று வகையான விகாரங்களுடன் இரட்டித்தல் என்ற ஒன்றை வகைப்படுத்துகின்றார். இது தோன்றலில் வரக்கூடியதே. ஆனால் ஒலிப்புமுறை இலக்கணத்தை மையப்படுத்தியே இதனைத் தனியாகப் பகுத்துள்ளனர்.

**அவிடே + போயி = அவிடப்போயி**

### தோன்றல் புணர்ச்சி

இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியின் இறுதிக்கும் வருமொழியின் முதலுக்கும் இடையே புதிதாக ஏதேனும் ஒரு எழுத்து, உருபுகள் இடம் பெறுமானால் அதனை தோன்றல் புணர்ச்சி அல்லது மிகுதல் புணர்ச்சி எனக் குறிப்பிடலாம். தோன்றல் புணர்ச்சியில் ஒற்றுமிகுதல், சாரியைத் தோன்றுதல், வேற்றுமை உருபு தோன்றுதல், இடைச்சொற்கள் தோன்றுதல் என இரண்டு சொற்களுக்கு இடையே தோன்றும் ஒற்றெழுத்து, உருபுகள் குறித்து அறிந்துகொள்ள முடிகின்றது.

**வாழை + பழம் = வாழைப்பழம் (தமிழ்)**
**பூ + கொடி = பூங்கொடி (தமிழ்)**
**மழு (வ்) இல்ல = மழுவில்லை (மலையாளம்)**

**கெடுதல் புணர்ச்சி**

இருமொழிப் புணர்ச்சியின்போது நிலைமொழியின் இறுதிச்சொல் கெடுதல் அல்லது நீங்குதல் கெடுதற்புணர்ச்சி எனப்படும். சிலவிடங்களில் உயிரெழுத்துக்கள் கெடும். அதனை கெடுதற் புணர்ச்சியாகக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் மலையாள மொழி இலக்கணத்தில் அதனை கெடுதல் என்கின்றார்கள் இலக்கண ஆசிரியர்கள்.

மகரத்தை இறுதியாகக் கொண்ட பெயர், வினைச் சொற்களில் மகர ஈறு கெடும்.

**மரம் + வேர் = மரவேர்(தமிழ்)**

நிலைமொழியின் ஈற்றிலுள்ள மகர ஈறு கெடுதலைக் குறிக்கின்றது.

**அது + அல்ல**
**அத் + அல்ல = அதல்ல (உகரம் கெடுதல்) (மலையாளம்)**

உயிர்எழுத்து கெடுதலையும் கெடுதல் புணர்ச்சியைக் கேரள பாணினீயம் கருதுகின்றது.

**திரிதல் புணர்ச்சி**

இரண்டு சொற்கள் இணையும்போது நிலைமொழியின் இறுதி மெய்யோ, வருமொழியின் முதலில் இருக்கக்கூடிய மெய்யோ, இரண்டுமோ, மற்றொரு மெய்யாகத் திரியுமானால் அதனைத்திரிதல் விகாரம் (அ) மெய்ப்பிறதாதல் என்கிறோம். நிலைமொழியின் ஈற்று ணகரம் டகரமாக மாறுதல்.

**மண் + குடம் = ம(ண்) + குடம் = மட்குடம் (தமிழ்)**

நிலைமொழி இறுதி லகரம் ஆய்தமாக திரிதல்.

**பல் + தலை = ப.்றலை (தமிழ்)**
**எட்டு + நூறு**
**எட் (ட்+உ) + நூறு (குற்றியலுகரம் ஒற்றொடு கெடும்)**

நிலைமொழியின் இறுதியிலுள்ள டகரம் ணகரமாகத் திரிந்துள்ளது.

**எட் + நூறு**
**எண் + நூறு**

நிலைமொழி இறுதி ணகரம் இரட்டித்தல்

**எண்ண் + நூறு**

நூறிலுள்ள நகர மெய் கெடும்.

**எண்ண் + ஊறு = எண்ணூறு (மலையாளம்)**

வருமொழியின் முதலெழுத்தான தகரம் றகரமாகத் திரிதல்.

**புணர்ச்சி மாறுபாட்டிற்கானக் காரணங்கள்**

1. எழுத்தமைப்பு
2. ஒலிமாறுபாடு
3. தொடரமைப்பு
4. பெயரமைப்பு
5. பொருளமைப்பு
6. வட்டார வழக்கு
7. பேச்சு வழக்கு, என்பன.

**எழுத்தமைப்பு**

நிலைமொழியின் ஈறும் வருமொழியின்முதலும் மட்டும் புணர்ச்சியினால் மாற்றத்திற்குக் காரணமாக அமையாது. நிலைமொழியின் ஒவ்வொரு எழுத்தும் புணர்ச்சி வேறுபாட்டிற்குக் காரணமாக அமையும்.

**பல் + ஐ = பல்லை**
**பால் + ஐ = பாலை**

**ஒலிமாறுபாடு**

உச்சரிப்பு ஒலியின் மாத்திரை அளவே இடம் மாற்றத்திற்குக் காரணமாக அமையும்.

**நாம் + அது = நம் (ஆ) + அது**

**நம் + அது = நமது**

**தொடரமைப்பு**

இருமொழியும் ஒன்றாக இருந்தபோதிலும் புணரும் நிலைக்கேற்ப பொருள் மாற்றம் அடைகிறது.

**ஆடு + குட்டி = ஆட்டுக்குட்டி**

**ஆடு + குட்டி = ஆடுகுட்டி**

**வேற்றுமை:** அது என்ற ஆறாம் வேற்றுமை உருபு மறைந்து வந்துள்ளது.

**அல்வழி:** உம்மைத்தொகை ‘அம்’ மறைந்து வந்துள்ளது.

**பெயரமைப்பு:** பெயர், அகப்பெயர்புணர்ச்சி மாற்றத்திற்கு காரணமாக அமைவதைக் காணலாம்.

**ஆண் + கால் = ஆண்க்கால்**

உயர்திணைப் பெயர் வல்லெழுத்துடன் புணரும்போது திரியும்.

**மண் + குடம் = மட்குடம்**

அ∴றிணையில் நிலைமொழியின் ணகரம் டகரமாகத் திரிந்துள்ளது.

**பொருளமைப்பு**

ஒரு சொல் பல பொருள்கள் குறித்து வருதலும் உண்டு. அவை புணரும்போது மொழியின் தன்மையை வேறுபடுத்த புணர்ச்சிமாற்றம் ஏற்படும்.

**வட்டார வழக்கு**

**புளி + கோடு → புளி + அம் + கோடு → புளியங்கோடு**

**புளி + கூழ் → புளிக்கூழ்**

புளி - மரம், சுவை என்ற இருவகையான பொருண்மையில் புணர்ச்சியில் இடம்பெறுகின்றது. ‘புளி’ என்ற சொல் வருமொழியில் புணரும் போது வல்லின, மெல்லின எழுத்துக்கள் மிகுவதற்கு வட்டார வழக்குச்சொற்கள் பயன்படுகிறது.

**பேச்சு வழக்கு**

இருமொழிப் புணர்ச்சியில் உறழ்ந்து வருதலும் உண்டு. அவ் உறழ்ச்சிப் பொருளில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்துவது இல்லை. உறழ்ச்சிக்குக் காரணம் மக்களின் பேச்சு வழக்கேயாகும். இப்பேச்சுவழக்கு இலக்கண உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. தேக்குடம், தெக்கே

**முடிவுரை**

இலக்கண ஆய்வானது இருமொழி இலக்கண நூல்களிலுள்ள இலக்கணத்தரவுகளோடு ஒப்பிட்டு அதன் பொதுத்தன்மை, சிறப்புத்தன்மைகளைக் கண்டறியும் நோக்கத்தில் தமிழ், மலையாள இலக்கணத்திலுள்ள புணர்ச்சிக் கோட்பாடுகள் ஒப்பிடப்பட்டுள்ளது. அந்நிலையில் தமிழிலக்கண புணர்ச்சி விதிகள் சொற்களின் சேர்க்கையால் உச்சரிப்பு, ஒலிப்பு முறைக்கும், தொடரமைப்பிற்கும் அடிப்படையாக அமைகின்றது. பாணினீயம் புணர்ச்சிக் கோட்பாட்டைக் கொண்டதாக மலையாள மொழி இலக்கணம் சமஸ்கிருதக் கலப்பான மொழித்தன்மையும், தனக்கான மொழி இலக்கணத்தை உருவாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் வழக்கிலுள்ள சொற்களே சான்றாகப் பகரப்பட்டுள்ளன. தமிழ் மலையாள மொழி இலக்கணங்களில் புணர்ச்சிக் கோட்பாடு பன்முகப் பொருண்மையினை உருவாக்கியுள்ளது.